ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1958/27 - 2016 මාර්තු මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.03.17
*1958/27 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள்

நியதிச்சட்ட முறையான இல. : *4639.*
விசேட இலக்கம் : கொ/ *1807*, கொ/ *1808.*

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்**

*19 ஆம் பிரிவின் கீழான நியதிச்சட்ட முறை விதிப்பு*

கொழும்பு 07, ஹோர்டன் பிளேஸ், இல. 21 இல் நோர்டன் லொஜ் இல் வசித்து, காலமாகி உள்ளவருமான கலாநிதி திரு. காமினீ கொரெயாவினால் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் நியதிச் சட்ட முறையானதொரு பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன், சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த ஆணைக்குழுவினால் நியதிச் சட்டமுறையான குத்தகைக்காரருக்கு சொந்தமாகிவிருந்த கமத்தொழில் காணிகளில் அவர் வைத்திருக்க அனுமதி வழங்கவேண்டிய பகுதியை நிர்ணயித்து 1977, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதிய 291/18 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதி விசேட) வர்த்தமானப் பத்திரிகையில் நியதிச் சட்டமுறையான விதிப்பு இல. 3244 இன் கீழ் நியதிச்சட்டமுறையான விதிப்பு விதிக்கப்பட்டது.

அத்துடன் மேற்குறிப்பிட்ட முகவரியில் வசித்து இருந்த கொ/ 1807 இன் நியதிச்சட்டமுறையான வெளிப்படுத்துநர் காலமாகி உள்ளவருமான கலாநிதி திரு. காமினீ கொரெயா அவர்களின் மாதா ஆகிய கொ/ 1808 இன் நியதிச்சட்டமுறையான வெளிப்படுத்துநராகிய காலமாகி உள்ளவருமான திருமதி அலிஸ் பிரீடா கொரெயாவின் நியதிச்சட்டமுறையானதொரு பிரகடனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அவளுக்காகவும் 1979, சனவரி மாதம் 29 ஆந் திகதிய 21/4 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதி விசேட) வர்த்தமானப் பத்திரிகையில் நியதிச்சட்டமுறையான விதிப்பு இல. 3533 இன் கீழ் நியதிச் சட்டமுறையான விதிப்பு விதிக்கப்பட்டது. ஆயினும் அந்த கொ/1808 இன் நியதிச் சட்டமுறையான வெளிப்படுத்துநர் திருமதி அலிஸ் பிரீடா கொரெயா என்பவர், 1978, ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதியில் அல்லது அதற்கு அண்மித்த தினத்தில் காலம் சென்றுள்ளதால் அவளின் மரணச் சொத்தின் சட்டப்படி உரிமையாளரான, காலமாகி உள்ளவருமான கலாநிதி திரு. காமினீ கொரெயா என்பவர் மீண்டும் காணிச் சீர்திருத்த சட்டப்படி ஆகக்கூடிய காணிகளின் உரிமையாளராக ஆக்கப்படுகின்றார்.

அதனால் 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) மற்றும் 1986 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டங்களின் திருத்தம் செய்த 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் காலமாகி உள்ளவருமான கலாநிதி திரு. காமினீ கொரெயா என்பவருக்கு உரித்தாக்கப்பட்ட ஆகக்கூடிய கமத்தொழில் காணிப் பகுதிகள் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமாகின்றது.

ஆகையால், அந்த கொ/1807 இன் நியதிச் சட்டமுறையான வெளிப்படுத்துநர் காலமாகி உள்ளவருமான கலாநிதி திரு. காமினீ கொரெயா என்பவரின் மரணச் சொத்துக்கு சொந்தமான புதிய நியதிச் சட்டமுறையான பகுதியை நிர்ணயித்து பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அத்துடன் தற்போது அந்த கொ/1807 இன் நியதிச் சட்டமுறையான வெளிப்படுத்துநர் பெயரில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1977, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதிய 291/18 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் நியதிச் சட்டமுறையான விதிப்பு இல. 3244 இன் கீழ் நியதிச் சட்டமுறையானது இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

தீ. ஏ. சுமனதிஸ்ஸ தாம்புகல,
தலைவர்,
காணிச்சீர்திருத்த ஆணைக்குழு.

காணிச்சீர்திருத்த ஆணைக்குழு,
இல. சீ 82, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,
கொழும்பு 7,
2016, மாச்சு 15.

**அட்டவணை**

1. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் ரிதீகம பிரதேச செயலாளர் பிரிவின் இல. 553, லிஹினிவெஹெர கிராம அலுவலர் பிரிவின் லிஹினிவெஹெர எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட 420151 ஆம் இலக்க, களத்திரல் நிலஅளவைப்படத்தின் காட்டப்பட்டுள்ளதுமான 2 ஆம் பகுதியில் ஹொலொந்கொல்ல எனும் வயற் காணியில் 1 ஏக்கர் 1 றூட் 16.9 பேர்ச்சஸ் அளவு கொண்ட 1 ஆம் இலக்க காணித்துண்டும்,

2. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் ரிதீகம பிரதேச செயலாளர் பிரிவின் இல. 553, லிஹினிவெஹெர கிராம அலுவலர் பிரிவின் லிஹினிவெஹெர எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட 420151 ஆம் இலக்க களத்திரல் நிலஅளவைப்படத்தில் காட்டப்பட்டுள்ளதுமான 2 ஆம் பகுதியில் ஹொலொந்கொல்ல எனும் வயற் காணியில் 48 ஏக்கர் 3 றூட் 33.1 பேர்ச்சஸ் அளவு கொண்ட 159 ஆம் இலக்க காணித்துண்டும் அதனுள்ளடங்கிய சகலதும்.

4- 278

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.